# ★ இலங்கையின் இராணுவ பலத்தில் வீழ்ச்சியாம்

(கொழும்பு)
விடுதலைப்புலிகளின் கடும் முற்றுகைக்குள்ளாகி இருக்கும் ஆனையிறவு இராணுவ முகாமை விடுவிக்க இராணுவம் இதுவரை எடுத்துவந்த சகல முயற்சிகளும் செயலிழந்துவருவது, இலங்கையின் இராணுவபலத்தை குறைவாக மதிப்பிடக்கூடியதாகவுள்ளதாக 'வெளிநாட்டு இரா

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 9 இதழ்: 164
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25-7-1991

## கிளேமர் தாக்குதல் படையினருக்கு சேதம்

(திருமலை)
திருமலையில் புலிகளின் 'கிளேமர்' தாக்குதலில் சிக்கிய படையினருக்கு பெரும் உயிர்ச்சேதமேற்பட்டுள்ளது.
நேற்றுக்காலை 10-20 மணியளவில் நிலாவெளி உல்லாச

[4-ம் பக்கம் பார்க்க]

## க.பொ.த. பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் திட்டமிட்டபடி க.பொ.த. (உயர்தர) பரீட்சையை நடத்துவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளதாக யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்

(4 ம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவு முகாமை மீட்கும் இறுதி இராணுவ முயற்சிக்கு முப்படைகளும் தயார் நிலையில்

## ஆயுதம், வெடி மருந்துகள் விநியோகம்

(கொழும்பு)

**ஆனையிறவு இராணுவ முகாம் மீதான புலிகளின் முற்றுகையை முறியடிப்பதற்கான இறுதி முயற்சிக்கு முப்படைகளும் தயாராகி வருகின்றன. இந்த இறுதி முயற்சியில் 4000 படைகள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக இராணுவ தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.**

முப்படைகளின் இம்முயற்சிக்காக கட்டைக்காடு, வெற்றிலைக்கேணியில் நிலைகொண்டுள்ள படையினருக்கு போதியளவு ஆயுதங்களும், வெடி மருந்துகளும் மற்றும் இராணுவத் தளபாடங்களும் நேற்று கப்பல்மூலம் கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

இதற்கென விமானப்படை தனது முழுப்பலத்தையும் இதில் பிரயோகிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது, தற்போது படைகள் ஆனையிறவு முகாமிலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்துக்கப்பால் நிற்பதாகவும் இராணுவத் தலைமைப்பீடம் அறிவித்தது. (சி)

## ஊரடங்கு தளர்வு

[கொழும்பு]
வடபகுதியில் மேலும் சில பகுதிகளில் இன்று காலை 6-00 மணிமுதல் ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் யாழ்.மாவட்டத்தில் சாவகச்சேரி, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்தும் அமுலிலிருக்குமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது; (சி)

## அழுகிய நிலையில் ராணுவ சடலங்கள்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவில் புலிகளிடம் வீழ்ச்சியுற்ற உல்லாச விடுதி முகாமிலிருந்து அழுகியநிலையில் படையினரின் 3 சடலங்

[4-ம் பக்கம் பார்க்க]

## அரசியல் சட்ட திருத்தம் அமைச்சர் ஹமீத் வாபஸ்

(கொழும்பு)
இலங்கையின் அரசியல் சட்டத்தில் சில மாற்றங்களைச் செய்ய அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் முன்மொழிந்திருந்த பல திருத்தங்களை அவர் வாபஸ் பெற்றுள்ளார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## ● ஆனையிறவுப் போரில் 300 புலிகள் வீர மரணம்

[யாழ்ப்பாணம்]
ஆனையிறவு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் கடந்த 15 நாட்களாக விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்துக்குமிடையில் நடைபெற்று வரும் கடும் மோதலில் இதுவரை 14உயர் அதிகாரிகள் உட்பட 250 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் பெண் போராளிகள் உட்பட 300 வீரவேங்கைகள் வீரமரணமடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வி]

## வேவு பார்த்தவர் கைது

(யாழ்ப்பாணம்]
விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை வேவு பார்க்க முற்பட்ட இருநபர்கள் விடுதலைப்புலிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியிலும் ஆனையிறவுப் பகுதியிலுமே இவர்கள் கைதுசெயப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (க)

## புலிகளுடன் ரகசிய பேச்சு; பிரதமர் விஜயதுங்க மறுப்பு

(கொழும்பு]
விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு ரகசியப் பேச்சுக்களை நடாத்தி வருவதாக வெளிவந்த செய்திகளை பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்க மறுத்துள்ளார். பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்; அரசியல் குறிக்கோள்களை எட்ட ஆயுதங்களை பாவிப்பதில்லை என புலிகள் அறிவித்தால் மாத்திரமே அவர்களுடன் பேச்சுக்கள் நடாத்தப்படும். புலிகளுடன் நேரடியாகவோ, மறைமுகமா

(4ம் பக்கம் பார்க்க)

## 48 மணி நேரத்தில் 41 படையினர் பலி

(கொழும்பு)
ஆனையிறவுப் பகுதியில் புலிகளுக்கும் அரச துருப்புகளுக்கும் இடையே கடந்த 48 மணி நேரத்தில் இடம் பெற்ற கடும் மோதலில் 41 படையினர் கொல்லப்பட்டுள்ளதாக இரா

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு போர் இந்தியா அவதானிக்கிறது

(புதுடில்லி)
இலங்கையில் ஆனையிறவுப் பகுதியில் தொடர்ந்தும் இடம் பெற்றுவரும் கடும் யுத்தத்தை இந்தியா அவதானித்து வருவதாக இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் நேற்று புதுடில்லியில்தெரிவித்தார்.

இந்த யுத்தத்தில் அரச படைகளுக்கும், புலிகளுக்கும் பெருமளவு சேதம் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இலங்கையில் தொடர்ந்தும் யுத்தம் நடைபெறுவது இந்தியாவிற்கு கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

## சர்வதேச கருத்திற்கு இலங்கை இராணுவம் மறுப்பு

(கொழும்பு)
ஆனையிறவு வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டு மோதலில் இராணுவத்திற்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டு புலிகளின் கை பெருமளவு ஓங்கியுள்ளதாக 'சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவித்து வரும் கருத்தை இலங்கை இராணுவ அதிகாரிகள் நேற்று கொழும்பில் மறுத்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## உதவிப்பணம்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்களுக்கு பொதுசன மாதாந்த உதவிப் பணம், புற்றுநோய், காச நோய், தொழுநோய் ஆகிய நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் உதவிப்பணம் ஆகியன தற்போது வழங்கப்படுகின்றது. (137)

## மீனவர் அச்சம்

[பூநகரி]

பூநகரி கடல் பிரதேசமான பள்ளிக்குடா, கௌதாரி முனை போன்ற பகுதிகளில் கடற்படையினர் ரோந்துசுற்றி வருகின்றனர். கடந்த 22-ம் திகதி பள்ளிக்குடா கடலில் மீன்பிடிக்கச் சென்றோர்மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம்செய்தனர். இதைத் தொடர்ந்து கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் கடற்றொழிலாளர்கள் அச்சமடைந்துள்ளனர். (23)

## புலிகளுக்கு உதவி

(மானிப்பாய்)

விடுதலைப் புலிகளின்வேண்டுகோளையடுத்து நவாலியிலுள்ள அனைத்து சனசமூக நிலையங்களும் நவாலி சிற்றூரவையின் அனுசரணையுடன் மண்மூடை தயாரிப்பதற்குத் தேவையான சாக்குகளை அப்பகுதி மக்களிடம் சேகரித்து புலிகளின் காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளனர்.

அத்துடன் தற்போது களத்தில் எதிரியுடன் நின்று போராடும் வீர வேங்கைகளுக்கு [illegible] உலர் உணவுப் பண்டங்களையும் இங்குள்ள மக்கள் தயாரித்து பெருமளவில் வழங்கியுள்ளனர். (71)

## தீர்த்தத் திருவிழா

(பருத்தித்துறை)

தென் புலோலி உபய கதிர்காமக்கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 12ம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

உபயகதிர்காமக் கந்தனின் தீர்த்தத் திருவிழா, எதிர்வரும் 27ந் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



கந்தசாமி
பிரேம்சந்திரகுமார்
[M Sc. பொறியியலாளர்]

ஆக்கம்: 11.11.1949
அழிப்பு: 25.07.1983

நீர் ஏகி ஆண்டு எட்டு
எட்டிற்று
எம் நிலையில் மாற்றம்
எத்தனையோ ஆகிற்று
ஏனினும் எம் நெஞ்சில்
உம் நினைவு நீங்கவில்லை.
உம் பிரிவால் துயருறும்:

அன்புப் பெற்றோர்

122, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி 5012]

## மகா கணபதி ஹோம யாகம்

(சாவகச்சேரி)

தமிழ் மக்கள் சுபீட்சமாக வாழவும், யுத்தத்தில் போராளிகள் வெற்றி பெறவும், போராளிகளின் ஆத்ம பலம், நலம் வேண்டியும் நுணுவில் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் மகாகணபதி ஹோம வழிபாடு, இம்மாதம் 29ந் திகதி திங்கட்கிழமை காலை 8-00 மணி முதல் நடைபெற உள்ளது.

## குருபூசை

(கொழும்புத்துறை)

தொல்புரம் மத்திய சன சமூக நிலையம், சர்வோதய சிறுவர் பாடசாலை ஆகியன இணைந்து மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையைக் கொண்டாடினர். (154)

## விசேட வழிபாடு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை எழிலூர் அன்னை வேளாங்கண்ணி ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதி நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை, ஆனையிறவு இராணுவ முகாம் போரில் வீர மரணமடைந்த வீர வேங்கைகளின் ஆத்மா சாந்தியடையவும், காயம் அடைந்த வீர வேங்கைகள் பூரண சுகமடையவும், போர்க்களத்தில் போராடும் வீர வேங்கைகளுக்கு ஆத்ம பலம் வேண்டியும் விசேட பூசைகள், பிரார்த்தனை வழிபாடுகள் இடம்பெற்றன.

பங்குத் தந்தை அருட்திரு. எஸ். ஜெபநேசன் அடிகளார் தலைமையில் இப்பூசை ஆராதனைகள் நடைபெற்றன. (154)

## கிளாலியில் அஞ்சலி

[நாவற்குழி]

கட்டைக்காடு நேரடி மோதலின்போது வீர மரணத்தைத் தழுவிக்கொண்ட போராளிகள் சந்திரநாயகி (சிவமலர் வடிவேலு, கிளாலி), ராசபாரதி (நாகலிங்கம் சிறீதவராசா, மட்டக்களப்பு) ஆகியோரின் புகழுடல்கள், மக்கள் அஞ்சலிக்காக கிளாலிறோமன் கத்தோலிக்க பாடசாலையில் வைக்கப்பட்டன.

இங்கு பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். பின்னர் மாவீரர்களின் புகழுடல்கள், கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுத் தீயுடன் சங்கமமாக்கப்பட்டன. (104)

## வீதி ஒழுங்குப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சாரணர் மாவட்டம், கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நூற்றுக்கணக்கான சாரணர்களுக்குச் சிறப்பாக நடத்திய முதலுதவிப் பயிற்சியுடனான வீதியொழுங்குப் பயிற்சியின் செய்துகாட்டற் குழுவாக மயிலணிச் சைவ மகா வித்தியாலயச் சாரணர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

இன்றைய அவசிய நிலைமைகளை முன்னிட்டுக் கொத்தணி மட்டத்தில் வீதியொழுங்கு முறைகளைச் செய்து காட்டும் குழுவாக இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொத்தணிகள் தமது பாடசாலைகளில் இருந்து மாணவர்களைச் சேர்த்து மேற்படி குழுவின் உதவியுடன் பயிற்சிகளை வழங்கலாமென்று மாவட்டச் சாரண ஆணையாளர் அன்றைய வீதியொழுங்குப் பயிற்சிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

# நோயாளர் உதவிப் பணம் வழங்கப்படுகிறது

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தொழுகாச, புற்று நோயாளர்களுக்கான மே, ஜூன் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டுவருகின்றது.

ஏற்கனவே வழங்கப்பட்ட மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான கொடுப்பனவுப் பணத்தை பலர் இன்னும் வந்து பெற்றுக்கொள்ளவில்லை என்றும் இவர்கள் உடனடியாக இக்கொடுப்பனவுகளை இப்பணிமனையில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் சமூக சேவை உத்தியோகத்தர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். [72]

## அதிபர்கள் ஓய்வூதியம்

[வட்டுக்கோட்டை]

பாடசாலை அதிபர் சேவையில் இருந்து இளைப்பாறுவோரின் ஓய்வூதியம் இனிமேல் கடைசிக்கால 5 வருட சேவையில் அதிபரால் கையாளப்பட்ட கணக்கு விபரங்கள், லீவுகள், புகையிரத ஆணைச் சீட்டுகள் முதலனாவை கணக்காளரால் பார்வையிடப்பட்டு ஓய்வூதியம் வழங்கப்படலாமெனச் சிபார்சு செய்யப்பட்ட பின்னரே ஓய்வூதியம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கடமையிலிருக்கும் அதிபர்கள் தொடர்ந்து தமது கடமைகளைச் சரியான முறையில் நிறைவேற்ற இந்தத் திட்டம் வழிவகுக்குமென கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. திடீரென மரணிக்கும் அதிபர்கள் விடயத்திலும் இத்திட்டம் உதவுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (139)

## மீண்டும் வேலை பெற முயற்சி

(கொழும்பு)

வளைகுடாப் பிரச்னையால் குவைத்திலிருந்து நாடு திரும்பிய இலங்கையருக்கு மீண்டும் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் கொழும்பு வேலைவாய்ப்பு பணியகம் ஈடுபட்டுள்ளது.

## பண்டத்தரிப்பில் கள் பதனிடும் தொழிற்சாலை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பரிஷ் தெங்குப் பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இதன்மூலம் நாளொன்றுக்கு சுமார் 250 போத்தல் கள்ளை இத்தொழிற்சாலையில் பதப்படுத்தமுடியுமென்று தெரிவிக்கப்படுகின்றது. பாவனைக்கு அதிகமாக உள்ள கள் உற்பத்தி குறைந்த காலங்களில் பயன்படுத்துவதற்கு இது ஏதுவாக இருக்கும் என்றும், தொழிலாளர்கள் கூடுதலான வருமானத்தை பெறக் கூடியதாக இருக்கும் என்றும் சங்க பொதுமுகாமையாளர் திரு. கி. குணரத்தினம் இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (72)

## செப். 30 - அக். 6 வரை உலக ஆசிரியர் தினம் கொண்டாட ஏற்பாடு

(உடுவில்)

உலக ஆசிரியர் தினம் இவ்வருடம் செப்டெம்பர் 30ம் திகதியில் இருந்து அக்டோபர் 6ம் திகதி வரை நாடு பூராவும் கொண்டாடப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரியர் தினக் கொண்டாட்டங்கள், பாடசாலை, கொத்தணி, கோட்டம், மாவட்டம் ஆகிய நிலைகளில் மேற்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இக்கொண்டாட்டக் காலங்களின்போது சிறப்பாகச் சேவையாற்றிய ஆசிரியர்களின் சேவை நலன்களைப் பாராட்டி அவர்களைக் கௌரவித்தல், ஆசிரியத் தொழிலின் மகத்துவத்தைப் பிரதிபலிக்கக்கூடிய நாடகங்களை மேடைகளில் நடித்தல், கவிதைகள், கட்டுரைகள் வெளியிடுதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

உலக ஆசிரியர் தினத்தையொட்டி ஞாபகார்த்த முத்திரையும் வெளியிடப்படவிருக்கிறது. (109)

## நினைவுத்தூபி திறப்பு விழா

[யாழ்ப்பாணம்]

பூநகரி வாடியடி கோட்டை இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரமரணமடைந்த வீரவேங்கைகளின் நினைவுத்தூபி திறப்பு விழாவும், நினைவுமலர் வெளியீட்டு வைபவமும் இம்மாதம் 27-ம் திகதி மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன. (23)

## இரங்கல் கூட்டம்

(பருத்தித்துறை)

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட சிறீலங்கா இராணுவத்தினரின் ஆட்லறி ஷெல்லிற்குப் பலியான எழுத்தாளரும், முன்னாள் 'ஈழநாடு' பத்திரிகை நிருபருமான நெல்லை. க, பேரனின் இரங்கல் கூட்டம் ஒன்று பருத்தித்துறை அறிவோர் ஒன்றுகூடலில் நடாத்தப்பட்டது.

பருத்தித்துறை அறிவோர் ஒன்றுகூடல் அலுவலகத்தில் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. (52)

## தமிழகத்தில் இடைத்தேர்தல்

(சென்னை)

தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி ராஜினாமாச்செய்த துறைமுகம் தொகுதிக்கும், செல்வி ஜெயலலிதா விலக்கிக் கொண்ட காங்கேயன் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல், எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி நடைபெறவுள்ளன. (பூ)

## கோரிக்கை

[பருத்தித்துறை]

பருத்தித்துறை பிரதேச சபை புலோலி உப- அலுவலகப் பகுதிக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் இன்றைய போர்க்கால நடவடிக்கைக்கு வேண்டிய அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சனசமூக நிலையங்களுக்கும் அறிவித்துள்ளது. சனசமூக நிலையங்கள் தத்தமது பகுதிகளில் இரத்த தானம் செய்ய பெயர்களைப் பதிவு செய்தவர்களின் பட்டியல்களை உடன் சமாசச் செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுள்ளது. வேண்டிய பொதுவிடங்களில் பொது பதுங்கு குழிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் சமாசம் கேட்டுள்ளது. (52)

## இளவாலை முதலிடம்

(பண்டத்தரிப்பு)

அண்மையில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் இளவாலைக் கொத்தணியைச் சேர்ந்த மாணவர்கள் 266 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்திற்கான சுழல் கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டனர்.

மேலும் சகல பிரிவினர்களுக்குமான அஞ்சலோட்டச் சுற்றுக் கிண்ணத்தையும் இவர்களே தட்டிக்கொண்டனர்.

இந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட உடற்கல்வி அதிகாரி திரு. நாகமணி கலந்து கொண்டார். இக்கொத்தணியைச் சேர்ந்த 3 வீரர்களும் ஒரு வீராங்கனையும் சிறந்த வீரர்களுக்கான பரிசைப் பெற்றுக் கொண்டினர்.

19 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான போட்டியில் செல்வன் ம. றொபேர்ட் 3 நிகழ்ச்சிகளிலும் முதலாம் இடத்தைப் பெற்று அனைவரதும் பாராட்டையும் பெற்றுக் கொண்டார். (82)

## அஞ்சலி

(பண்டத்தரிப்பு)

ஆனையிறவில் இடம்பெற்ற தாக்குதலின்போது வீரமரணமடைந்த சிறுவிளானைச் சேர்ந்த வீரவேங்கை ரமேசுக்கு சிறுவிளான் ஞானோதய சனசமூக நிலையத்தினர் தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள். ரமேஷின் புகழுடம்பு இங்கு கொண்டுவரப்பட்டபோது மேற்படி சனசமூக நிலையத்திலும் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, பெருந்தொகையான மக்கள் தமது இறுதியஞ்சலியைச் செலுத்தினார்கள். (72)


## சித்திரம் வினாவிடை

(ஓவியக்கலை வினாவிடை)

கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் உயர்தரம், சாதாரணதரம் அனைத்து ஆண்டுகளிலும் சித்திரப் பாடம் பயிலும் மாணவர்களுக்கும் சித்திர ஆசிரியர்களுக்கும் ஓவியக்கலையில் ஈடுபாடு கொண்டவர்களுக்கும் உபயோகமானது.

600 வினாக்களும் அவற்றின் விடைகளும்.

எங்கும் கிடைக்கும்.

ஆக்கியோன்: யசோ

வெளியீடு: நடுவுத் துருத்தி,
நல்லூர்ச் சந்தை.

[சி-5026]

## ★ "அன்று தமிழ் இளைஞர் வீடுகளை இராணுவம் சுற்றி வளைத்தது!

# இன்று ஆனையிறவு இராணுவ முகாமை போராளிகள் சுற்றி வளைத்துள்ளனர்!!" - தேவர்

(பண்டத்தரிப்பு)

"முன்னொரு காலத்தில் ஆனையிறவு இராணுவ முகாமில் தமிழ்இளைஞர்கள் தடுத்து வைத்து சித்திரவதை செய்யப்பட்டார்கள். இந்த முகாமில் வைத்து விசாரணை செய்வதற்காக தமிழ் இளைஞர்கள் பலரின் வீடுகள் சுற்றிவளைக்கப்பட்டன. இன்று எமது உறுதி மிக்க போராட்டத்தினால் இதே ஆனையிறவு இராணுவ முகாம் எமது போராளிகளினால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது".

இவ்வாறு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் வீரமரணமடைந்த 17 வீரவேங்கைகளின் புகழுடம்புகள் நேற்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது இரங்கலுரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்த திரு. தேவர் குறிப்பிட்டார்.

திரு. குகதாசன் மாஸ்டர் தலைமையில் நடைபெற்ற இந்த இரங்கலுரை நிகழ்ச்சியில் திரு தேவர்தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:- சுதந்திர காற்றை சுவாசிக்கவேண்டும் என்ற இலட்சியத்துடன் எமது போராளிகள் போராடிக் கொண்டிருக்கின்றனர்கள். இந்த போராட்டம் எமது தன்மானத்திற்கு விடுக்கப்பட்ட சவாலாக ஏற்றுக்கொண்டு எமது போராட்டத்தை தொடர வேண்டும். மறைந்த போராளிகள் விட்டுச்சென்ற இடத்தை நிரப்புவதற்கு ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு மண்மீட்பு போராட்டத்தில் ஈடுபட எமது இளம் சந்ததி முன்வரவேண்டும்.

திரு. பரா உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"இறப்பு என்பது எல்லோருக்கும் யதார்த்தமானது. ஆனால் மாவீரர்களின் இறப்பு காலவெள்ளத்தில் அழியாத ஒன்று. காலம் காலமாக நூற்றுண்டுகளாக அவர்களின் தியாக மறைவு மக்கள் உள்ளத்தில் ஒளிவிடும். எமது விடுதலைப்போராட்டம் இன்று மரபு ரீதியிலான யுத்தமாக நடைபெறுகின்றது.

அரசின்முழுமுனை தாக்குதல்களை தீரமுடன் எதிர்த்து எதிரிக்கு பேரழிவை ஏற்படுத்தி வருகின்றனர்கள் எமது போராளிகள். 36 இலட்சம் தமிழ்மக்களும் விடுதலைப் புலிகளுடன் இணைந்து தங்கள் முழுப்பங்களிப்பையும் வழங்கி போராடுவார்களானால் எமது தமிழீழ இலட்சியத்தை விரைவில் அடையலாம். ஆகவே இளைஞர்கள், யுவதிகள் பயிற்சி பெற்று இணைந்து போராடினால் எதிரி எமதுமண்ணைவிட்டு விலகி சிதறி ஓடுவான்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியை சேர்ந்த ஜெயா உட்பட மற்றும்பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்கள்.

(72)

---

## சர்வதேச செலாவணி நிதியத்தில்

# உறுப்பு நாடாகச் சேர சோவியத் யூனியன் விண்ணப்பம்

(மொஸ்கோ)

சோவியத் ரஷ்யா தனது மாக்ஸிச கொள்கைகளை மாற்றியமைத்து சந்தைப்பொருளாதாரக் கொள்கையில் இறங்கவுள்ளது. இதற்கேற்ப சட்டங்களும் மாற்றி அமைக்கப்படவுள்ளன.

இதன்முன்னோடியாக சர்வதேச செலாவணி நிதியத்தில் முழு உறுப்பு நாடாக இடம் பெற சோவியத் அரசு விண்ணப்பித்துள்ளது.

தானாக விதித்துக்கொண்ட பொருளாதார தனிமையிலிருந்து 40 ஆண்டுகட்கு பின்னர் இப்போது சர்வதேச நிதிமுறையில் புகுவதற்கு சோவியத் யூனியன் முயன்று வருகிறது. (பூ)

---

## இராசி பலன்

25-07-1991
(தமிழ் திகதி ஆடி 09)
வியாழக்கிழமை

சதுர்த்தி: மு. இ. 10.17 வரை

பூராடம்: மு. ப. 11.08 வரை

சித்தயோகம்: இராகுகாலம் பகல் 1.32முதல் 3.02 வரை

சுபநேரம்: காலை 7.32முதல் 9.02 வரை.

மேடம்: கருத்து முரண்பாடு, கவலைதரும் செய்தி, தொழில்பிணக்கு.

இடபம்; கடும்சினம், மன உழைச்சல், ஏற்றத்தாழ்வு.

மிதுனம்: வசதி மேம்பாடு, வாக்குசாதுரியம், தொழில் சிறப்பு.

கடகம்: பொருளாதார மேம்பாடு, குடும்ப மகிழ்ச்சி. பாராட்டு.

சிங்கம்: மனவேதனை, சென்ற இடத்தில் பகை, குடும்ப பிரிவு.

கன்னி: ஓரவஞ்சனை. புத்திரர் சினம், சகோதரபணி.

துலாம்: காரியசித்தி, தொழில் லாபம், பகை நீங்குதல்.

விருச்சிகம்; பயணதுன்பம், நண்பர் விரோதம், பணச் செலவு.

தனுசு: மக்கள் பெருமை, பணவசதி. பெருமையான செயல்.

மகரம்: இனசன விரோதம், கருத்து முரண்பாடு, மனச் சுமை.

கும்பம்: காரிய பலிதம், நற்காரியம், தானதர்மம்.

மீனம்; அதிகாரிகள் பாராட்டு, தொழில் வெற்றி, வஸ்திரலாபம்.

, ஜோஸியர்

---

## ★ ஆனையிறவு இராணுவ முகாமைச் சுற்றி

# விடுதலைப் புலிகள் பாதுகாப்புடன் கூடிய வலுவான அரண்களை அமைத்துள்ளனர்

(கொழும்பு)

ஆனையிறவு முகாமை சூழவுள்ள பரந்த பகுதிகளில் விடுதலைப்புலிகள் உறுதியான வலுவான பாதுகாப்புடன் கூடிய காவலரண்களை அமைத்து உக்கிரதாக்குதல்கள் நடாத்திவருவதாக அரசு அறிவித்துள்ளது.

நவீன பதுங்கு குழிகளை அமைத்து தாக்குதல் நடாத்தி வருவதால் படையினர் பெரிதும் சிரமமுறுகின்றனர் என்றும் அரசு மேலும் தெரிவித்துள்ளது. (க)

---

## பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையினர், நாட்டின் நலன் வேண்டி 'ஓம் சாந்தி' பிரார்த்தனை வழிபாடு ஒன்றை, இம்மாதம் 28ந் திகதி காலை 8-30 மணி தொடக்கம் நல்லை ஆதீனத்தில் நடத்தவிருக்கின்றனர்.

---

## சுழிக்காற்று: 90 பேர் பலி; 4000 பேர் பாதிப்பு

[பீக்கிங்]

சீனாவில் ஏற்பட்ட கடும் சுழிக்காற்றுக்கு 90 பேர் பலியானதாகவும் 4000 பேர்வரையில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஏராளமான கட்டடங்கள், தொழிற்சாலைகள் நெல் வயல்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சீன செய்தி ஸ்தாபனம் தகவல் வெளியிட்டுள்ளது.

---

## தென்மராட்சியில் தெருக்கூத்து

(நாவற்குழி)

தென்மராட்சிப் பிரதேசமெங்கும் தெருக்கூத்து நடைபெறுகிறது. தென்மராட்சி மாணவர் அமைப்பு தனியாகவும், தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழகம் தனியாகவும் இரண்டு பிரிவுகளாக இத் தெருக்கூத்துக்களை அதிவேக பிரச்சாரமாக மேற்கொண்டுள்ளனர். (107)

---

## நல்லூர் கந்தசாமிகோவில்

# வருடாந்த உற்சவ கால ஏற்பாடுகள்

(கொழும்புத்துறை)

ஆகஸ்ட் 15ல் ஆரம்பமாகும் நல்லூர் கந்தசாமி கோவில் உற்சவகால ஏற்பாடுகள் பற்றி கடந்த வாரம் யாழ். மாநகரசபை அலுவலகத்தில் ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஆராயப்பட்டது,

இக்கலந்துரையாடல் கூட்டத்தில் உற்சவகாலங்களில் தொண்டர் சேவையாற்றும் நிறுவனங்களின்பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்ஆலய உற்சவகாலத்தொண்டர் சேவைகள் பற்றியும் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் மாநகர சபை ஊழியர்கள், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை, திருநெல்வேலி சைவத்தொண்டர் நிலையம், யாழ். மாவட்ட சென், ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவு ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றி தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

வழமைபோல் இவ்வருடம் சுவாமி வீதிவலம் வந்து திருவிழா சிறப்பாக நடைபெற இருப்பதாகவும், தொண்டர் சேவைகள் 25 தினங்களும் வழமைபோல் அதிகாலை 6-00 மணிமுதல் மாலை 6-00 மணி வரை நடைபெறும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (154)

---

## வெளியிலிருந்து

# ஆங்கில ஆசிரியரை நியமிக்க ஏற்பாடு

(கொழும்பு)

பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக் குறையைநீக்கு முகமாக வெளியிலிருந்து ஆங்கில ஆசிரியர்களை கல்வி அமைச்சு சேவைக்கு அமர்த்தவுள்ளது

நாட்டில் 3 ஆயிரம் ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. இந்த வெற்றிடங்களுக்கு நிரந்தர ஆசிரியர்களை நியமிக்கும் வரை ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், ஆங்கில அறிவுடைய அரச ஊழியர்கள் ஆகியோர்களிலிருந்து சேவைக்கு ஆட்கள் நியமிக்கப்படவுள்ளனர். இப்படியாக நியமிக்கப்படும் பகுதிநேரஆசிரியர்கட்கு அவரவர்களுடைய தகைமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படவுள்ளது.

தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கட்கு பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது. [பூ]

---

## ★ பரந்தன், இயக்கச்சியிலிருந்து

# 1000 குடும்பங்கள் இடம்பெயர்வு!

(கிளிநொச்சி)

ஆனையிறவு போரையடுத்து ஆனையிறவு, தட்டுவங்கொட்டி குமாரபுரம், பரந்தன், முரசுமோட்டை ஊரியான், கரடிப் போக்கு, இயக்கச்சி, புதுக்காடு முதலான பகுதிகளை சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்தோர் கிளிநொச்சி பாரதிபுரம், கிருஸ்ணபுரம் அக்கராயன்குளம், கோணவில், உருத்திரபுரம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் முதலான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்

கிளிநொச்சிபகுதியில் பெருந்தொகையான மாணவர்களும் பொதுமக்கள் தொண்டர்களும் நிவாரணம், முதலுதவி மற்றும் சேவைகளிலும் ஈடுபட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. (83)

---

## அப்பர் இல்லம் முதலாமிடம்

[வட்டுக்கோட்டை]

சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்ற போது அப்பர் இல்லம் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது. இப்போட்டி வித்தியாலய அதிபர் க செல்லையா தலைமையில் நடைபெற்றது.

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு. க. மகேசன் பிரதம விருந்தினராகவும் சுழிபுரம் கொத்தணி அதிபர் திரு. செ. பத்மநாதன் இளைப்பாறிய அதிபர் திரு. இ முருகேசு ஆகியோர் சிறப்புவிருந்தினராகவும்கலந்து கொண்டனர். (139)

---

## களப்பலியான


# வீரவேங்கைகளுக்கு மீசாலையில் அஞ்சலி

(நாவற்குழி)

கட்டைக்காடு வெற்றிலைக்கேணி மோதலின்போது வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட போராளிகளான சங்கன் (சு. கருணாநிதி, எழுதுமட்டுவாள்), அல்விட் (சி. கருணாகரன் - மட்டக்களப்பு), நளினி (ச. நிர்மலன், கல்முனை) ஜெயா (செ. நடராசா, மட்டக்களப்பு), ஆகியோரது புகழுடல்கள் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்கள். அஞ்சலியைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

அஞ்சலிக்கூட்ட முடிவில் இந்த மாவீரர்களின் புகழுடல்கள் ஊர்வலமாக கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு எடுத்துசெல்லப்பட்டு தீயுடன் சங்கமமானது: (107)



யாழ். முத்திரைச் சந்தையில் நேற்று முன்தினம் வைக்கப்பட்டிருந்த 26 இராணுவத்தினரின் சடலங்கள் பொதுமக்களின் பார்வையிடுவதையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் சடலங்களைக் கையளிப்பதற்காக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ராஜன், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பொறுப்பாளர் திரு. பிறட்றிக்கை அழைத்து வருவதையும், லொறிகளில் வைக்கப்பட்டிருந்த இராணுவத்தினரின் சடலங்களை செஞ்சிலுவைச்சங்க அதிகாரி ஒருவர் பார்வையிடுவதையும், படங்களில் காணலாம். (படங்கள்; தேவா)

# சண்முகம் கொலை விவகாரம்

# நீதி விசாரணைக்கு உத்தரவு

(சென்னை)

ராஜிவ்காந்தி கொலைவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சண்முகம் தப்பியோடியது பற்றியும், ஒரு மரத்துக்குக்கீழ் அவரது உடல் தொங்கிக் கொண்டிருந்தது பற்றியும் மாஜிஸ்திரேட் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் மத்திய புலனாய்வுக் கழகமும் இயக்குநரின் விசாரணை ஒன்றுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று நாடாளுமன்றத்தில் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்த மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான், மத்தியஅரசு இச்சம்பவத்தைக் கவலையுடன் நோக்குவதாகவும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முக்கிய விசாரணையை தீவிரமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமென்றும் கூறினார்.

## சண்முகம் கொலையால்—

# ராஜீவ் கொலை விசாரணையில் பெரும் பின்னடைவு

(சென்னை)

கோடிக்கரை சண்முகத்தின் கொலைச் சம்பவத்தினால் திரு. ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பான விசாரணையில் பின்னடைவு நிலை ஏற்பட்டுள்ளது.

சண்முகம் தி. மு. க. உறுப்பினர் என்றும், இவர் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. எவ்வித அடையாளமும் தெரியாது தொண்டைக் குழியை நெரித்துக் கொலை செய்திருக்க முடியும் என வைத்தியவட்டாரங்களும் தெரிவித்துள்ளன.

இவரது கொலை தொடர்பாக காங்கிரஸ் சட்சி உட்பட பல கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. (பூ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

போராளிகளைப் பராமரிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு "பாலம்" பணிமனை ஆலோசனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அரச, தனியார், சனசமூக நிலைய, தொண்டர் ஸ்தாபன வலிகாமம் பிரிவிலுள்ள பிரதிநிதிகளை இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

0 0 0

நாளை வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ் அரச செயலகத்தில் நடைபெறும் நெல் கொள்வனவு சம்பந்தமான கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றுமாறு சகலப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர்களையும் யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

## கண்ணிவெடி 2 படையினர்பலி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இருபடையினர் கொல்லப்பட்டும் ஐவர் படுகாயமடைந்ததாகவும் அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## க. பொ. த.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

23-ம், 24-ம் திகதிகளில் பரீட்சை ஆணையாளருடனும் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடனும் தொடர்பு கொண்டதன் மூலம் இப்பரீட்சையை நடாத்துவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது பரீட்சையை நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யாழ். மாவட்டத்தில் 67 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுமுள்ளது. (சி)

## புலிகளுடன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கவோ பேச்சுக்கள் எதனையும் அரசு நடாத்தவில்லை.

ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகளுடனேயே பேச்சுக்கள் நடாத்தி இனப்பிரச்னைக்கு தீர்வு காண அரசு முயற்சித்து வருவதாகவும் அவர் கூறினார். (சி)

## இலங்கையின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவ இராஜதந்திரிகள்' மறைமுகமாக விமர்ச்சிக்க தொடங்கியுள்ளனர்.

ஆனையிறவு முகாமின் தகவல்கோபுரம் புலிகளால் சேதமாக்கப்பட்டதால், பாதுகாப்பு அமைச்சுக்கு ஆனையிறவுமுகாமிலிருந்து எதுவித தகவல்களையும் பெறமுடியாமல் இருப்பதாக கூறியிருப்பது ஆச்சரியத்தை அளிப்பதாக 'மேற்குலக இராணுவ இராஜதந்திரி ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

சுமார்முப்பது ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட ஆனையிறவு முகாமில் சுமார் எண்ணூறு படையினர் எதுவித வசதிகளுமின்றி புலிகளின் தீவிரதாக்குதலுக்கும், முற்றுகைக்கும் உள்ளாகியிருப்பது புலிகளின் இராணுவபலத்தை மதிப்பிடக்கூடியதாக தாக இருப்பதாக ராஜதந்திரிகள் வெளியுலக பத்திரிகைகளுக்கு தெரிவித்துள்ளனர்.

கடந்த 14ந்திகதி கட்டைகாட்டில் ஆனையிறவு இராணுவமுகாமைக் காப்பாற்ற இறக்கப்பட்ட இலங்கையின் பலம்வாய்ந்த 'கஜபாகு அணி' இதுவரை முன்னேறியுள்ள தூரம் இராணுவ வட்டாரங்களில் கவலையைத்தந்துள்ளது அவர்கள் ஒருயார் தூரத்தைக் கடக்க மண்மூடைகள் அடுக்கப்பட்ட ஒரு புலிகளின் காவல்அரணை அழிக்க வேண்டியுள்ளது. இதற்கு விமானப்படை கடற்படையின் முழுவிச்சான பலம் கஜபாகு அணிக்கு தேவைப்படுகிறது. இந்நிலையில் உதவிக்கரம் நீட்டும் இராணுவஅணி ஆனையிறவை அடைய இன்னும்பல நாட்கள் செல்லலாம். இவர்களுக்கான வசதியை இராணுவத்தால் இன்று வழங்கமுடியாது. தரையிறக்கப்பட்ட இராணுவத்திற்கோ, இராணுவ அதிகாரிகளுக்கோ வழங்கப்பட்டுள்ள விமானத்தால் எடுக்கப்பட்ட வரைபடமும் உதவுவதாகத் தெரியவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# 5 மாவீரர்களுக்கு அராலியில் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கட்டைக்காட்டுப் பகுதியில் நடைபெற்ற நேரடி மோதலில் வீர மரணமடைந்த ஐந்து வீர வேங்கைகளின் புகழுடம்புகள் நேற்று கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகின.

வீரவேங்கைகளான சுருளி [சிவகுரு அப்பன்- மயிலிட்டி], டயஸ் [நாகமுத்து ஸ்ரீசங்கர்- அச்செழு], சிவா [ராஜப்பு அன்ரனி அமலநேசன்- நிலாவெளி( ஆகியோரின் புகழுடம்புகள் நேற்று அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இதை தொடர்ந்து திரு. குகதாஸ் மாஸ்டர் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் திரு. தனபால், திரு. தேவர், திரு. மோகன், சத்தியா, றூபலதா ஆகியோரும் உரையாற்றினர்கள்.

வீரவேங்கைகளான மனோ (தியாகராசா மகேந்திரன் - அக்கரைப்பற்று], கையிலன் (ராமலிங்கம் ராஜ் - களுவாஞ்சிக்குடி] ஆகியோரின் புகழுடம்புகளும் கோப்பாய் மாவீரர்கள் மயானத்தில் தீயுடன் சங்கமமாயின. (வி)

## கிளைமர் தாக்குதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதி முகாமிலிருந்து வெளியேறிய படையினர் 500 யார் தூரம் முன்னேறியதும் புலிகள் 'கிளைமர்' தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டனர்.

இதில் படையினருக்குப் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (சி)

## 48 மணி நேரத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவ வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகள், முகாம் மீது இடைவிடாது மோட்டார் தாக்குதலை மேற்கொள்வதனால் காயமடைந்த துருப்பினரை எடுத்துச் செல்ல முடியாதிருப்பதாகவும் இராணுவ அணியினரின் முன்னேற்றம் பெரிதும் மந்தமடைந்திருப்பதாகவும் அவ்வட்டாரவகள் தெரிவித்தன. (க-153)

## அழுகிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இங்கிருந்து பல ஆயுதங்களையும், பெருமளவு ரவைகளையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

## அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமை மற்றும் அரசியல் உரிமைக்கான சர்வதேச அமைப்பின் உறுப்பினர் நாடான இலங்கை இந்த அமைப்பின் கட்டுப்பாட்டுக்கு இணங்கியபடி அரசியல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளாததையடுத்தே அமைச்சர் ஹமீத் தான் முன்மொழிந்த திருத்தங்களை வாபஸ் பெற்றுள்ளாராம்.

இதேவேளை அமைச்சர் ஹமீத்தின் முடிவு அரசுக்கு மேற்படி அமைப்புகளிடமிருந்து பெரும் நெருக்கடியை கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

## சர்வதேச

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முகாம் புலிகளிடம் வீழும் நிலையிலில்லையென்றும் கட்டைகாட்டிலும், வெற்றிலைக்கேணியிலும் தரையிறங்கிய படையினர் முன்னேறி வருவதாகவும் புலிகளின் கடும் எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். [சி]

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம்

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த சரஸ்வதி சுப்பிரமணியம் காலமானார். அன்னார் திரு. வே. த ச. சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி பத்மலோஜினி விக்னேஸ்வரனின் அன்புத் தாயாரும், திரு. சின்னையா விக்னேஸ்வரனின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ஆ. செ மார்க்கண்டுவின் அன்புச்சகோதரியும், உமா, செந்தூரன், வாசுதன், சுதர்ஷினி ஆகியோரின் அன்புப்பாட்டியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-07-91 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் பருத்தித்துறை பொதும்யானத்தில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சி. விக்னேஸ்வரன்

'வசந்தம்', வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

(சி 5024)


# திருவழிபாட்டு ஒவியக்கண்காட்சி

ஜூலை 27ம், 28ம் திகதிகளில் புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் (கதிற்றல் வீதி) நடைபெறவிருந்த திருவழிபாட்டு ஓவியக்கண்காட்சி தவிர்க்கமுடியாத காரணங்களால் பின்போடப்பட்டுள்ளது.

அருள்திரு. ஜே. நீக்கிலஸ்

(சி-5027)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under License Number B/186386/81